# ஆணையரின் (TC) தூக்கம் கலைவது எப்போது?

போக்குவரத்து போக்குவரத்து துறையின் பணியாளர்களது நலன் கருதி, சங்கத்தின் செயற்குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்களால், போக்குவரத்துதுறையின் போலி சங்க தலைவரும் சங்கரன்கோவில் RTOவின் PAவான ரகுவை அவரது தலைவர் பதவியில் இருந்து எப்போதோ நீக்கிவிட்டார்கள் ஒரிஜினல் சங்கத்தை சேர்ந்த செயற்குழு உறுப்பினர்கள்.

ஆனால், ரகுவின் பதவி பறிக்கப்பட்ட பின்பும் இவரது அணி சார்பாக தேர்தலில் நின்று தோற்றுப் போன ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு 'போலி'யாக பொறுப்பாளர் பதவிகளை வழங்கிய ரகு, அவர்களோடு சேர்ந்து தனது தரகர் வேலைகளை பார்த்தும், உயர் அதிகாரிகளை மிரட்டியும் வரும் ரகுவுக்கு தற்போது சங்கரன் கோவில் RTO – கண்ணனும் துதிபாடி வருவதை என்னத்த சொல்றது என்கின்றனர் போக்குவரத்துத் துறையைச் சார்ந்தவர்கள்.

மேலும், ரகு அணியில் நின்று ஜெயித்தவர்களில் ரகு மற்றும் , மற்றொரு உறுப்பினர்களான கருணை பிரகாஷ் மற்றும் செந்தில் குமரனும் ஆவர். இப்படி வெற்றி பெற்றவர்களான செந்தில்குமரன் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு போய்விட்டார். கருணை பிரகாசோ எந்த களங்கமும் வந்துவிடக்கூடாது என எதிலும் ஆர்வம் இல்லாமல் தன்னை தனிமைபடுத்திக்கொண்டார். ஆக ரகு மட்டும் தனிமைபடுத்தப்பட்டார்.

அதேநேரத்தில் தேர்தலில் நின்று ஜெயித்த செயற்குழு உறுப்பினர்களை மெஜார்ட்டியாக கொண்ட கு.ப.வின் ஆதராவாளர் களே பெருபான்மையாக இருந்து வருவதால் இவர்களே ஒரிஜினல் போக்குவரத்து துறை சங்கத்தை சேர்ந்தவர்களாக கருதப்பட்டு வருகிறது. இதுதான் நியாயமும்கூட! அதுவும் ரகு மட்டுமே தன்னிச்சையாக நின்று சங்க விதிகளுக்கு முரணாகவும், அரசுக்கு எதிராக செயல்பட்ட காரணத்தால், 'போலி' தலைவரான ரகுவுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, தலைவர் பதவியினையும், பறித்துவிடுகிறார்கள் இந்த ஒரிஜினல் போக்குவரத்துதுறை சங்கத்தை சேர்ந்தவர்கள். மேலும் 'போலி'யான ரகுவுக்கு எதிராக ஒரு தீர்மானமும் இந்த ஒரிஜினல் செயற்குழு உறுப்பினர்களால் நிறைவேற்றப்படுகிறது. (ஆதாரம் : பார்க்க இணைப்பில்)

இந்த நிலையில் ரகுவை கண்டித்து, அரசுக்கும், ஆட்சிக்கும் எதிராக செயல்பட்டுவரும் ரகு மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆணையர் நடராஜன் IAS அவர்களால் கடும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டிய ரகு மீது ஆணையர் கண்டுகொள்ளாமல் இருப்பதால் ஆணையரின் மீது பல்வேறு அதிருப்திகள் வெளியாகி கொண்டே உள்ளது. அது விரைவில் மிகப்பெரிய கலவரமாக வெடிக்கும் என்றே தெரிய வருகிறது. எனவே ஆணையர் நடராஜன் பற்றி தவறான விமர்சனங்கள் டெல்லி வரை எழும் முன் போலி சங்கத்தினை பற்றி தீர விசாரித்து உரிய நடவடிக்கை எடுத்தால் நலம் என்கின்றனர் எழிலகத்தை சேர்ந்தவர்கள். அதே நேரத்தில் மெஜாரிட்டி சங்கத்தை சேர்ந்த செயற்குழு உறுப்பினர் களிடத்தில் இருந்து இதுகுறித்த சங்கதிகளை அறியாத ஆணையர் இதனை பற்றி சிறிதும்கூட சிந்திக்காமல், செயல்படுத்தாமல் 'போலி' தலைவரான டுபாக்கூர்

'போலி' சங்கத் தலைவர் ரகு





'டுபாக்கூர்' போலிச் சங்க பொதுச் செயலாளர் முரளி

ரகுவின் தரப்பில் இருந்து, ரகு வின் கோரிக்கையின் தரப்பிற்கு பதில்கூறுவதும், மற்றும் எழிலகத்தில் ரகசியம் காக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களையும் ரகுவுக்கு வழங்கிவருவதும், அரசுக்கு எதிராக போக்குவரத்து ஆணையரின் செயல்பாடுகளாக உள்ளதாய் ஒரிஜினல் சங்கத்தை சேர்ந்தவர் களின் புலம்பல்கள் சற்று அதிகமாகவே ஒலிக்க தொடங்கிவிட்டது.

இது சம்பந்தமாக உதாரணத்திற்கு சொல்லவேண்டும் என்றால் சமீபத்தில், ரகுவின் சகபணியாளாரான அண்ணா நகர் RTO - NORTH WEST அலுவலகத்தில் PAவாக இருக்கும் மனிதாபிமான வரும் நல்லதொரு அதிகாரியான வெங்கடேசன் அவர்களால் VRS கேட்டு ஆணையரகத்திற்கு விண்ணப்பித்திருந்தார் இந்த VRS மனுவின் தகவல்களை அங்குள்ள அதிகாரிகள் மூலம் அறிந்த ரகு, அதனை கெடுத்து, தடுக்க வேண்டும் என்ற நோக்கோடு, ஆணை யரகத்தில் இருந்து VRS வழங்குவதற்கு முன்பே வெங்கடேசனின் பணி ஒய்வுக்கு வாழ்த்து சொல்வதுபோல் ஒரு பதிவை ரகுவின், வாட்ஸ் ஆஃப் செயலின் மூலம் அனைவருக்கும் பகிரப்படுகிறது.

இதனை வைரலாக்கிய ரகுவால், வெங்கடேசனின் VRSக்கு அனுமதி கிடைக்கவிடாமல் செய்து, அவரது VRS யை ரத்து செய்ய வைத்த அதிபுத்திசாலியான ரகுவின் தந்திர குணத்திற்கு (Criminal) இதனை உதாரணமாக கூறிவருகின்றனர். அதே போல் ஏற்கனவே DTC நடராஜனை சிக்கவைத்து இவரது சக பணி யாளர்களான 30 சூப்பிரண்டுகளையும் தனது சுயநலத்திற்காக சிக்க வைத்த பெருமைகளையும் கூட ரகுவின் பல்லக்கில் ஏற்கனவே முத்திரைகளை பதித்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது. அது போல தற்போது பதவி உயர்வுபெற உள்ள Asstகள் நேரிடையாக கணக்காளர் Norms–க்கு செல்ல ஆணையரிடம் எல்லாம் பேசி, பேசி பேசி, பேசி, முடித்துவிட்டதாக கூறும் ரகுவின் ஆடியோவும் நம்மால் வெளியிடப்பட்டது.

இது போன்ற ஆணையரகத்தில் இருந்து வெளியேறப்படும் ரகசிய அறிக்கைக்கான உத்தரவுகள் எல்லாம், ஆணையரால் வெளியிடப்போகும் உத்தரவுகளை திட்டவட்டமாக கைபேசி வாயிலாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்து, அதில் ஆதாயம் (லஞ்சம்) தேடி வரும் ரகு பேசிய ஆடியோவையும் அரசின் கவனத் திற்கு நாம் கொண்டு சென்றோம். ஆனால் ரகு மீது ஆணையரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் நம்மிடம் பேசிய ரகு, ‘‘யப்பா.... கோபாலே நான் பேசின ஆடியோ பத்தி எப்படியோ எங்கேயோ வாங்கி வெளியிடுற... என்னை பத்தி செய்தி வேற போட்டுக்கிட்டே இருக்க... எப்பப்பா என்னப்பா இது... இப்படி போடுவதை எப்ப நிறுத்துவ என நொந்து கொண்டார் நம்மிடம். ‘வினை விதித்தவன் வினை அறுப்பான்’ என்ற மன நிறைவோடு நாமும் தொலைத்தொடர்பை துண்டித்துக் கொண்டோம்.

இப்படி ‘பாம்பும் சாகணும்; தடியும் உடைய கூடாது’ என்ற ரகுவின் சகுனி தனங்களின் நிலைகளை பலரும் அறிந்ததால் நாலாபக்கமும் இருந்து ரகுவின் செய்திகளோடு, ரகுவுக்கு மாமா வேலை செய்துவரும் டைப்பிஸ்ட் வெள்ளைச்சாமி மற்றும், இவர்களது முறைகேடுகளுக்கு ‘முறவாசல்’ செய்துவரும் RTO கண்ணன் பற்றிய செய்திகளும் நம்மை தேடி தேடி வருகின்றன. நாமும் தொடர்ந்து பதிவிட்டு அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று வருகிறோம்.

இப்படி சங்கரன்கோவில் RTO அலுவலக அதிகாரிகளான RTO கண்ணன், டைப்பிஸ்ட் வெள்ளைச் சாமி, RTO PAவான ரகு ஆகி யோரின் வீதிமீறல் செயல்களை எல்லாம் ஆணையர் அறிந்தும் அறியாத மாதிரி இருக்கிறாரோ இல்லையோ, அனால் நிச்சயமாக உளவுத்துறை அதிகாரி கள் அறிந்திருக்க வாய்புகள் உண்டு. எனவே ஆணையர் நடராஜன் IAS அவர்கள் இனிவரும் காலங்களிலா வது இதுபோன்ற செய்திகளில் ஆதாயம் (லஞ்சம்) தேடி வரும் ரகுவைப் போல் உள்ளவர்கள் மீதும், ஒட்டுனர் பயிற்சி பள்ளிகளின் உரிமங் களை ரத்து செய்வேன் என அடியாட் களோடு மிரட்டும் வெள்ளைச்சாமி போன்றோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


வெள்ளைச்சாமியின் மிரட்டல் வீடியோ ஆதாரத்தோடு ஆட்சியர்



நடராஜன் ஐ.ஏ.எஸ்.

மற்றும் அரசு செயலர்கள் அனைவரது கவனத்திற்கும் வழங்கப்பட்ட பின்பும் வெள்ளைச்சாமி மீது உரிய நடவடிக்கை இல்லாமல் போனதற்கு காரணம், தெற்கத்திய பகுதிகளில் உள்ள பிரபல கோவில்களுக்கும், சுற்றுலாத் தலங்களுக்கு செல்லும் போக்குவரத்து உயரதிகாரிகளுக்கும் அவரது குடும்பத்தாருக்கும், அவரை சார்ந்த நண்பர்களுக்கும்கூட வெள்ளைச்சாமியின் பணிவிடை களின் காரணமாகத்தான் இந்த ‘எடுப்பை’ விட்டுவிடக்கூடாது என கடந்த ஏழு வருடத்திற்குமேல் சங்கரன்கோவிலிலே பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்திகளை சிலர் கூறி வருகின்றனர்.

பெரும்பான்மை நிர்வாகிகளால் ரகுவின் நீக்கல் தீர்மானம்


தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு

மாநில மையம்: அரசு அங்கீகாரம் எண்: 82/1970

14/1, தேரடி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.

சிறப்புத் தலைவர் தோழர். கு. பாலசுப்ரமணியன்

- 3 -

மேலும், செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பாண்மை உறுப்பினர்களின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக, சர்வாதிகாரப்போக்குடன் சில அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பின் மாநில தலைவர் அவர்கள் ஒன்றிப்பின் மற்ற நிர்வாகிகளைப் போலவே மாநில செயற்குழுவில் (அவரும்) ஒரு உறுப்பினர்தான். தனிநபரின் முடிவைவிட செயற்குழுவின் பெரும்பாண்மை உறுப்பினர்களின் முடிவே இறுதியானது என இச்செயற்குழு முடிவு செய்கிறது. எனவே, தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பின் செயற்குழுவின் ஒப்புதல் இல்லாமல் மாநில தலைவர் திரு. சீ. ரகு அவர்களால் இதுநாள்வரை தன்னிச்சையாக வெளியிடப்பட்ட அனைத்து அறிவிப்புக்களையும் இச்செயற்குழு ரத்து செய்கிறது.

பணியாளர் நலனுக்கு விரோதமாக, தன்னிச்சையாக, சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொள்ளும் மாநில தலைவர். திரு. சீ. ரகு அவர்களிடம் பலமுறை கேட்டுக்கொண்டும் அவர் தனது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. எனவே, பணியாளர் நலன் கருதி மாநில தலைவர் பதவியிலிருந்து திரு. சீ. ரகு அவர்களை இச்செயற்குழு நீக்கம் செயகிறது. இன்வரும் காலங்களின் அவர் எந்த இடத்திலும், எந்த ஊடகத்திலும் அவர் வகித்து வந்த பதவியின் பெயரை பயன்படுத்தக்கூடாது எனவும் ஒன்றிப்பின் letter pad-ஐ பயன்படுத்தக் கூடாது எனவும் அவரை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது. மேலும், உடனடியாக ஒன்றிப்பின் கட்டிட சாவி மற்றும் Byelaw ஆகியவற்றை திரு. பா. அனந்தராமன், தலைமை நிலையச் செயலாளர் அவர்கள் வசம் ஒப்படைக்குமாறு திரு. சீ. ரகு அவர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இத்தனைக்கும் இவரது உயரதிகாரியான DTCயால் வெள்ளைச்சாமியின் ஆட்டம் தாங்க வில்லை என போக்குவரத்து ஆணையருக்கு ஒரு ரகசிய அறிக்கை வைக்கப்பட்டும், வெள்ளைச் சாமிக்கு தொலைதூர பணியிடமாற்றம் கொடுக்கப் படாமல் ஆதாயம் (லஞ்சம்) கருதி வெள்ளைச்சாமி சங்கரன்கோவிலிலே அனுமதிக்கப்பட்டிருப்பதும் அதிகாரிகளின் ஊழல்களை இதுவே வெட்ட வெளிச்சமாக்கி உள்ளது. மேலும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது உரிய விளக்கம் கேட்கப்பட்டு, அவர்கள் மீது ஊழல் வழக்குகள் பதிய விஜிலென்ஸ் இயக்குனர் அலுவலக அதிகாரிகளால் உத்தரவிடப்பட நாம் பணிந்து கோருகிறோம்.

அதேபோல் இதனை எல்லாம் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அரசு செயலர்களும், உரிய அரசின் அதிகாரிகளும் கவனத்தில் எடுத்து, ரகு எப்படி யெல்லாம் அரசுக்கும், ஆட்சிக்கு எதிராக செயல்பட்டார், இப்போதும் எப்படி செயல்பட்டு வருகிறார் என்பதையும், வெள்ளைச்சாமியின் மிரட்டல்களையும், RTO கண்ணனின் ‘முறவாசல்’களையும் அறிந்துகொள்வதோடு, மெஜாரிட்டி சங்கத்தை சேர்ந்த செயற்கு உறுப்பினர்களிடத்திலும், ரகுவின் போலி சங்கத்தை பற்றியும் அறிவதோடு கடந்த காலத்தில் தலைவராக இருந்த சுரேஷ்பாபு விடம் (94436 55630) கேட்டும், மற்றும் தற்போதைய செயற்குழு நிர்வாகிகளான ராஜன் (9677077678), குமார்(7010873400), சுமேஷ் (8072398125), துளசி லெட்சுமி (7305365747), சுவாமிநாதன் (70599 79797), விஜயகுருசாமி ( 9865648845),பாலாஜி (9710737575), கோபிராஜன் (9360 109522), செண்பகராஜா (9842548096)ஞானப்பிரகாசம் (9842175645) அனந்தராமன் (984249 1972) அபுபக்கர் சித்திக் (9942523547) ஆகி யோரிடம் கலந்துரையாடல் செய்து உரிய நடவடிக்கையினை ரகு மீது எடுப்பது என்பதுதான் போக்குவரத்து துறையின் ஆணையருக்கு பல சிறப்புகளை கொண்டு சேர்க்கும் என்பதே உண்மையாகும். இதில் எந்தளவிலும் சந்தேகமில்லை என்பதே நிஜம். ஆனால், ஆணையர் மற்றும் எழிலக அதிகாரி களால் ரகு மீதுள்ள எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்படாததாலும், அவரை கண்டு கொள்ளாமல் இருப்பதை பார்த்தால் ரகுவின் செயலுக்கும் அவரது சகுனித் தனத்திற்கு பயம் கொள்வதாய் தெரிய வருகிறது. நேர்மையான உயர் அதிகாரி களின் நடவடிக்கைகளில் அதிரடிகள் இருக்கும்பட்சத்தில் மட்டும்தான் அந்த உயரதிகாரி களின் நேர்மைகளும், தூய எண்ணங்களும் அவர் களது பணிகளில் உள்ள நேர்மைகளுக்கு வெளிச்சம் போட்டு காட்டும் அமைப்பாக வெளிப்படும் என்பது தான் நிதர்சனமான உண்மைகளாகும்.

இந்த நிலை இனியும் நீடிக்கும்பட்சத்தில் அரசிற்கு வரும் தேவையற்ற களங்கங்களையும் தடுப்பது என்பது முடியாமல் போய்விடும் என்பதால், ‘போலி’ தலைவரான ரகு மீது எடுக்கும் கடும் நடவடிக்கைகளே இந்த அரசுக்கும், அரசு அதிகாரி களுக்கும், அதிரடியான பணியாளர் களுக்கும் ஏற்படும் களங்கத்தை தடுக்கும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

எனவே, நேர்மைக்கு மாறான பதவி உயர்வும், பணியிடமாற்றமும் பெற்று விட முயல்பவர்களுக்கு மட்டும்தான் ரகு போன்ற தரகர்கள் தேவை என்பதை உணர்வதோடு, முறையாக வர வேண்டிய பதவி உயர்வுக்கும், இடமாற்றத்திற்கும் ஏன் ஐந்து லட்சம்


இப்படிக்கு

(சுப. விஜயகுருசாமி) மாநில பிரச்சாரச் செயலாளர்.

(கோ.ரா. பாலாஜி) மாநில துணைத்தலைவர் (புறநகரம்).

(ர. சுவாமிநாதன்) மாநில அமைப்புச் செயலாளர்.

(பா. அனந்தராமன்) தலைமை நிலையச் செயலாளர்

(செ. அபுபக்கர் சித்திக்) மாநில துணைப்பொதுச்செயலாளர்

(டீ. ராஜன்) மாநில துணைத்தலைவர் (நகரம்)

(நா. சுமேஷ்) மாநில துணைத்தலைவர் (புறநகரம்).

(மு. துளசிலட்சுமி) மாநில துணைத்தலைவர் (புறநகரம்).

(அ. கோபிராஜன்) மாநில துணைத்தலைவர் (புறநகரம்).

(வெ.ஞானப்பிரகாசம்) மாநில துணைப்பொதுச்செயலாளர்.

(வி. செண்பகராஜா) மாநில துணைப்பொதுச்செயலாளர்.


(கா. குமார்) சட்ட ஆலோசகர்.

நகல்; திரு. சீ. ரகு, நேர்முக உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தாம்பரம், சென்னை.
நகல்; அனைத்து நிர்வாகிகள், தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு.
நகல்; அனைத்துப் பணியாளர்கள், தமிழ்நாடு போக்குவரத்துத்துறை.
நகல்; போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

2:32 pm

ரகுவின் நீக்கத்தை ஆமோதித்த அனைத்து நிர்வாகிகள் கையொப்பம்

**ரகுவை எச்சரிக்கை செய்யும் தீர்மானம்**


தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு
மாநில மையம்: அரசு அங்கீகாரம் எண்: 82/1970
14/1, தேரடி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 600 005.
சிறப்புத் தலைவர் தோழர். கு. பாலசுப்ரமணியன்
- 4 -

3) தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பின் செயற்குழுவின் ஒப்புதல் இல்லாமல் வெளிநபர் ஒருவர் ஒன்றிப்பின் TNTDSA – என்ற இலச்சினையை தவறாகப் பயன்படுத்தி சில whatsapp குழுக்களை ஆரம்பித்து, அக்குழுக்களுக்கு admin-ஆக செயல்பட்டு பணியாளர்களிடம் அரசுக்கு எதிரான தவறான செய்திகளை பரப்பி வருவதாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. இதன் காரணமாக ஒன்றிப்பு அரசுக்கு எதிராக செயல்பட்டு வருவதாக அரசு வட்டாரங்களில் ஒன்றிப்பின் மீது கெட்ட பெயரை ஏற்படுத்தும் என இச்செயற்குழு நம்புகிறது. மேலும், இந்த நபர் ஒன்றிப்பின் பெயரில் நாட்குறிப்பேடுகளை வெளியிட்டு பணியாளர்களிடமிருந்து பணம் வசூல் செய்து வருவதாக உரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவரது இத்தகைய செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நபருக்கு இச்செயற்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த நபருக்கு இச்செயற்குழு 15 தினங்கள் கால அவகாசம் வழங்குகிறது. 15 தினங்களுக்குள் இந்த நபர் ஒன்றிப்பின் இலச்சினையை பயன்படுத்தி தனது சுய லாபத்திற்காக நடத்திவரும் whatsapp குழுக்களை கலைத்துவிட வேண்டும். மேலும், இனிவரும் காலங்களில் வேறு எந்த குழுக்களிலும் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பு தொடர்புடைய எந்த செய்தியையும் பதிவிடக்கூடாது எனவும் இந்த நபரை இச்செயற்குழு எச்சரிக்கிறது. செயற்குழுவின் இந்த எச்சரிக்கையை மீறும் விதமாக நடந்துகொள்ளும் பட்சத்தில் தொடர்புடைய நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இச்செயற்குழு தெரிவித்துக்கொள்கிறது.

4) தமிழ்நாடு போக்குவரத்துத்துறையில், பாதிக்கப்பட்ட பணியாளர்கள் சிலர் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை சரிசெய்வதற்காக நீதிமன்றத்தை அணுகி உத்தரவுகளைப் பெற்று போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். அத்தகைய நீதிமன்ற உத்தரவுகளின் மீது நீதிமன்றம் நிர்ணயம் செய்துள்ள கால அளவிற்குள் தீர்வுகள் காணப்படுவதில்லை. அத்தகைய கோப்புக்கள் ஆண்டுக்கணக்கில் நிலுவையில் உள்ளன என தெரியவந்துள்ளது. எனவே, நீதிமன்ற உத்தரவுகளின் மீது உரிய காலக்கெடுவிற்குள் நடவடிக்கை எடுத்து பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை சரிசெய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு உரிய காலக்கொடுவிற்குள் முடிக்க காலதாமதம் ஏற்படும் நேர்வுகளில், அதுதொடர்பான விபரங்களை சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இச்செயற்குழு போக்குவரத்து ஆணையர் அவர்களை கேட்டுக்கொள்கிறது. மேலும், இப்பொருள் தொடர்பாக விரைவில், தமிழ்நாடு போக்குவரத்துத்துறை பணியாளர் ஒன்றிப்பின் சிறப்புத்தலைவர் தோழர். கு. பாலசுப்ரமணியன் அவர்களின் தலைமையில், உயர்திரு. தலைமைச் செயலாளர் அவர்களை நேரில் சந்தித்து மனு அளிப்பதென இச்செயற்குழு முடிவு செய்துள்ளது.

5) கோரோனா பெருந்தோற்று வேகமாக பரவிவருவதன் காரணமாகவும், அரசு அறிவித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாகவும் மாநில செயற்குழு உறுப்பினர்களால் ஒரே இடத்தில் கூடி செயற்குழு கூட்டத்தை நடத்த இயலாத நிலையில் Video Conference (Google Meet) வழியாக நடத்தப்பட்ட இந்த செயற்குழு கூட்டத்திற்கு, நேரடியாக நடத்தப்படும் கூட்டங்களுக்கு உள்ள அனைத்து சட்டபூர்வமான மதிப்பும் உள்ளதென இச்செயற்குழு அங்கீகாரம் வழங்குகிறது. இனிவரும் காலங்களிலும் இத்தகைய Video Conference வழியில் செயற்குழு கூட்டங்களை நடத்தி முடிவுகளை மேற்கொள்ளலாம் எனவும், அவ்வாறு நடத்தி முடிவுகளை அறிவிப்பு செய்யும்போது, செயற்குழு உறுப்பினர்களின் கையொப்பங்களை pdf வடிவில் பதிவு செய்து அறிவிப்புக்களை வெளியிடவும் இச்செயற்குழு அங்கீகாரம் வழங்குகிறது.

6) ஒவ்வொரு தனிநபரின் (பணியாளரின்) பிரச்சனையும் ஒன்றிப்பின் பிரச்சனையே என இச்செயற்குழு தீர்மானித்துள்ளது. எனவே, பாதிக்கப்படும் பணியாளர் ஒன்றிப்பின் செயற்குழுவிற்கு எழுத்து பூர்வமாக புகாரளிக்கும் பட்சத்தில் அவர்களின் பிரச்சனைகளில் தலையிட்டு தீர்வு காண ஒன்றிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்.

என ரகுவிடம் கேள்விகளை எழுப்புகிறபட்சத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் நேர்மையான கு.ப. தலைமையில் செயல் படும் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களின் பணிகளும் அவர்கள் உங்களது தோளோடு தோள் நிற்கும் சகோதர சகோதரிகள் என்பதை ஒட்டுமொத்த போக்குவரத்து பணியாளர்களும் எப்போது புரியப்போகிறார்களோ என்ற கேள்விகளும் பணியாளர்கள் மத்தியில் வீறுகொண்டு எழுந்து வருவது தற்போது அதிகரித்து வருகிறது.

எனவே, இந்த போலி சங்க பொறுப்பாளர்களால் அரசுக்கு எதிராகவும் பணியாளர்களின் நலனுக்கு எதிராகவும் செயல்படும் அனைத்து விஷயங்களுக்கும் ரகுவோடு கூட்டணி வைத்த சங்கரன்கோவில் RTO கண்ணனும் தற்போது முன்னெடுத்து செல்வதை ஆணையர் மற்றும் அமைச்சரவை அலுவலகமும் விரைந்து விசாரிப்பதே அடுத்தடுத்து அரசுக்கு ஏற்படும் களங்கங்கள் தடுக்கப்படும் என்கின்றனர் விபரமறிந்தவர்கள். கடந்த 9–07–2018–ல் RTO கண்ணனின் மீது சொத்துகுவிப்பு வழக்கு ஒன்று FIR இருக்கின்ற நிலையில், இவருக்கு எப்படி RTO பதவி உயர்வு என்பதே கேள்வியாக எழுந்து நிற்கிறது. (பார்க்க: விஜிலென்ஸ் FIR)

இப்படி விதிகளை மீறுவோர் மீதான தண்டனைகளுக்குரிய நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டிருந்தால் போக்குவரத்து துறையின் சங்கத்தினை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்ற பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையாகவும் எழுந்திருக்காது. எனவே இனியும் தாமதப்படுத்தாமல் இந்த போலி சங்கத்தின் மீது போர்கால நடவடிக்கை எடுக்கப்படுவதே போக்குவரத்து துறைக்கு வெகுசிறப்பை சேர்க்கும் என்பது மட்டுமல்லாது மகுடம் சூட்டும் நிலைக்குள் கொண்டு சேர்க்கும் என்பதே நிஜமாகும். அதேபோல இதில் Technical சங்கமான ஆய்வாளர் மற்றும் RTO சங்கத்தினையும்கூட உரிய வரைமுறைக்குள் கொண்டுவர போக்குவரத்து துறை உயர் அதிகாரிகளாலும், அரசு செயலர்களாலும் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டாலே பல்வேறு பிரச்சனைகளுக்கும் உரிய தீர்வுகள் எளிதில் கிடைக்கும் என எழிலக தரப்பில் உள்ளவர்களே பலரும் தெரிவித்து வருகின்றனர். அதேபோல், டெக்னிக்கல் சங்கத் தேர்தலும் பல வருடங்களாக முறைப்படி நடக்காமல் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, அரசுக்கு எதிராக போலி சங்கம் நடத்தி வந்த 'போலி' தலைவரான ரகு மீது மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால்தான் சென்னையில் இருந்து சங்கரன்கோவிலுக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டார் ரகு. ஆனால் இவரது ஊழலுக்கு தற்போது ஆணையர் அலுவலகமே கைகோர்த்து வருவது தான் போக்குவரத்து துறையில் பலருக்கும் வியப்பை தருகிறது. எனவே பணியிடமாற்றம் செய்யப்பட்ட ரகு சங்கரன்கோவில் RTO அலுவலகத்திலே இருந்து மக்கள் பணிசெய்ய ஆணையர் உத்திரவிட வேண்டும் என நேர்மையான சங்கத்தை சேர்ந்த செயற்குழு உறுப்பினர்களோடும் மற்றும் ரகுவின் பணிகளால் தொய்வுகள் அடைந்த நிலையில் அலைச்சலில் இருந்து வரும் சங்கரன்கோவில் பொதுமக்களின் கோரிக்கைகளோடு, நாமும் பணிந்து கோருகின்றோம். ஆணையரும், மற்றும் உள்துறை செயலரும் கவனித்து, RTO கண்ணன் மற்றும் PA ரகு மீதும் உரிய நடவடிக்கை எடுப்பதோடு சங்கரன்கோவிலிலேயே ரகு தங்கி பணிபுரிய உத்தரவிட வேண்டும்.

அதிரடியான நடவடிக்கைகள் பாயுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

10.05.2022


# நெல்லை கோபால்

மூத்த பத்திரிகையாளர்

சாம்டவர், 1/771, முனுசாமி சாலை, கே.கே. நகர், சென்னை 600 078. செல்: 99944 78389